දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2784825

ලේකම් / செயலாளர் / Secretary: 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. ...........................

අධ්‍යාපන අමාත්‍යාංශය

கல்வி அமைச்சு

Ministry of Education

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ බත්තරමුල්ල

'இசுருபாய' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பத்தரமுல்ல

"Isurupaya", Sri Jayawardhanapura Kotte Battaramulla

මගේ අංකය / எமது இல. / My No. ED/1/2/1/3/60

දිනය / திகதி / Date 2013.01.15

சுற்றறிக்கை இல.: 6/2013

சகல மாகாண கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
கல்வி அமைச்சின் சகல பணிப்பாளர்கள்,
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல பாடசாலை அதிபர்கள்.

## பாடசாலை ஆலோசனை மற்றும் வழிகாட்டல் வேலைத்திட்டங்கள்

சுய அபிமானத்துடன் இலங்கை சிறார்கள் உலக சமூகத்திற்கு கையளிக்கும் பாரிய பொறுப்புக்காக அரச கல்விக்காக கணிசமான முதலீடுகளை மேற்கொள்கின்றது. இவ் எதிர்பார்க்கப்பட்ட பயனை வெற்றிகரமாக்குவதற்காக பாடசாலைகளில் பல்வேறுபட்ட அறிவு சார்ந்த விரிவான பாடவிதானங்களுடன் அதற்கு உதவக் கூடிய பிரயோக வாழ்க்கைத் தேர்ச்சியினை உள்ளடக்கிய வேலைத்திட்டங்கள் பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

அபிவிருத்திச் செயற்பாடுகளின் போது மானிட வளம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததுடன் நாட்டின் அபிவிருத்தியில் அடைவு மட்டமாக அமைவது எதிர்கால மானிட வளத்தினைத் திட்டமிடுவதாகும். இதன் போது பாடசாலை மாணவர்களின் உடல், உள மற்றும் சமூக நலன் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இவ்விடயம் தொடர்பாக பாடசாலை மட்டத்தில் உதவிச் சேவையாக வழிகாட்டல் மற்றும் ஆலோசனைச் சேவைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பில் இதற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள இல. 2001/16 சுற்றறிக்கைக்கு அப்பால் இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

இச்சுற்றறிக்கை மூலம் கீழ்க்குறிப்பிடப்பட்ட விடயங்களைப் பின்பற்றுமாறு ஆலோசனை வழங்கப்படுகின்றது.

1) வேலைத்திட்டம் "பாடசாலை ஆலோசனை மற்றும் வழிகாட்டல் சேவை வேலைத்திட்டம்" என்ற பெயரில் அமுல்படுத்தப்படுகின்றது.

2) சகல பாடசாலைகளிலும் இவ்வேலைத்திட்டத்திற்காக கீழ்க்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் கீழ் உரியவாறு பெயரிடப்பட்ட ஆசிரியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படல் வேண்டும்.

அ) 300 மாணவர்களை விடக் குறைந்த பாடசாலைகளுக்காக ஆசிரியர் ஒருவரை பகுதி நேர சேவையில் ஈடுபடுத்த வேண்டும்.

ஆ) 300 மாணவர்களை விட மேற்பட்ட சகல பாடசாலைகளையும் முழு நேரம் விடுவிக்கப்பட்ட ஆசிரியர் ஒருவரை சேவையில் ஈடுபடுத்த வேண்டும்.

இ) இரட்டை மொழி அல்லது மும்மொழி மூலம் கற்பித்தல்கள் மேற்கொள்ளப்படுவதாயின் மொழி மூலத்திற்கு அமைய மேற்கூறப்பட்ட மாணவர் எண்ணிக்கையினைக் கருத்திற்கொண்டு அவ்வவ் மொழிக்காக ஆசிரியர் ஒருவர் வீதம் சேவையில் ஈடுபடுத்தப்படல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட (அ), (ஆ) மற்றும் (இ) பகுதியின் கீழ் ஆசிரியர்களை ஈடுபடுத்தல் 2003/38 ஆசிரிய எண்ணிக்கை தொடர்பான தீர்மானம் சுற்றறிக்கைக்கு அமைய மேற்கொள்ளப் பட்டுள்ளது.

ஈ) இதற்கு மேலதிகமாக பாடசாலை ஆசிரிய எண்ணிக்கை போதியளவாக அமைந்திருப்பின் பல பிரிவுகளைக் கொண்ட பாடசாலைகளுக்காக அவ்வப் பாடசாலைகளின் தேவைக்கு ஏற்றவாறு அப்பிரிவினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக ஆலோசனைகளை நியமிக்க முடியும்.

3) பாடசாலை ஆலோசனை மற்றும் வழிகாட்டல் சேவைக்குரிய ஆசிரியர் மேலதிக ஆசிரியராக இருக்கக் கூடாது என்பதுடன் எக்காரணம் கொண்டும் பதிலீட்டாளர் இன்றி இடமாற்றங்களை மேற்கொள்ளக் கூடாது.

4) ஆசிரியரைத் தேர்ந்தெடுத்தல்

அ) இலங்கை ஆசிரிய சேவையின் 2-II அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் நிரந்தர ஆசிரியராக இருத்தல்.

ஆ) உயர் நபர்களுடனான தொடர்புகளைப் பேணுவதற்கான இயலுமை கொண்டவராக இருத்தல்.

இ) பாடசாலை வளாகத்துக்குள் உயர்ந்தபட்சம் 15 கிலோ மீற்றருக்குள் வசிக்கக் கூடியவராக இருப்பது மிகப் பொருத்தமாகும்.

ஈ) முன்னைய சேவைக் காலத்துக்குள் தண்டனை அல்லது ஒழுக்காற்றுச் செயற்பாடுகளுக்கு உட்படாது இருத்தல் வேண்டும்.

உ) உடல், உள தேகாரோக்கியம் கொண்டவராக இருப்பது அத்தியவசியத் தேவையாகும்.

ஊ) இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் சகல ஆசிரியர்களும் இச்சேவையை மேற்கொள்வதற்காக விரிவான கடிதத்தினை வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக வழங்குதல் வேண்டும்.

5) ஆலோசனைப் பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்களைத் தரப்படுத்தல்

அ) ஆலோசனைச் சேவை உதவியாளர்

கீழ்க்குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்யும் ஆலோசனைப் பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்கள்.

ஆ) உதவி மாணவர் ஆலோசனை

ஆலோசனைச் சேவைக்காக 60 மணித்தியாலத்தை விட மேற்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்ட நிறுவனத்தின் மூலம் குறுகிய காலப் பயிற்சியினைப் பெற்றுள்ள ஆசிரியர்கள்.

பயிற்சி நிறுவகம் : தேசிய கல்வி நிறுவகம், கல்வி அமைச்சு, மாகாண மற்றும் வலயக் கல்வி அலுவலகம், பல்கலைக்கழகம் அல்லது அதற்குச் சமமாக அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவகம், இலங்கை மன்ற நிறுவகம், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் மற்றும் மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆலோசனைச் சபையில் பதிவுசெய்யப்பட்டுள்ள கல்வி நிறுவகம்.

இ) மாணவர் ஆலோசனை

மேற்கூறப்பட்ட நிறுவனங்களின் மூலம் 200 மணித்தியாலங்களை விட மேற்படாத பயிற்சி மற்றும் டிப்ளோமா சான்றிதழ் பெற்றோர்.

ஈ) சிரேஷ்ட மாணவர் ஆலோசனை

ஆலோசனைகள் தொடர்பாக 80 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட பிரயோகப் பயிற்சி கொண்ட பட்டப்பின் பட்ட மட்டத்திலான தகைமைகளைப் பெற்ற அல்லது மேற்கூறப்பட்ட (ஆ) தகைமை கொண்ட ஆலோசனை அல்லது மனோவியல் கலைமானிப் பட்டம் அல்லது அதனை விட மேற்பட்ட தகைமை.

6) பாடசாலை ஆலோசனை மற்றும் வழிகாட்டல் வேலைத்திட்டங்களை பாடசாலைகளில் அமுல்படுத்தல்

இதற்காக விசேட குழு பாடசாலைகளில் அமுல்படுத்தப்படல் வேண்டும்.

"பாடசாலை ஆலோசனை மற்றும் வழிகாட்டல் குழு" என்ற பெயரில் குழு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அ) குழுவின் உள்ளீடு – மொத்த அங்கத்தவர் எண்ணிக்கை 10 ஆகும்.

அதிபர் உத்தியோகபூர்வ அதிகாரத்தின் மூலம் குழுவின் தலைவராக நியமனம் பெறுவார். பாடசாலையில் உள்ள பாடசாலை ஆலோசனை மற்றும் வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர் குழுவில் குழுவின் செயலாளர் மற்றும் அமைப்பாளராகச் செயற்பட வேண்டும். பிரதி / உதவி அதிபர்கள் இருவர் அல்லது ஒரு பிரிவுக்குப் பொறுப்பான ஆசிரியர் குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்படல் வேண்டும்.

பாடசாலை மாணவர் நலன்புரிப் பணிகள் தொடர்பில் கூடுதலான ஆர்வம் கொண்ட இரு ஆசிரியர்கள் ஆசிரிய சபையின் இணக்கப்பாட்டுக்கு அமைய ஏனைய இரு அங்கத்தவர்களாக நியமிக்கப்படுதல் வேண்டும்.

பாடசாலையில் சிரேஷ்ட மாணவத் தலைவர்களில் இருவர் மற்றும் விளையாட்டு உட்பட பாட இணைப் பிரிவுகளின் விசேட செயற்பாடுகள் கொண்ட மாணவர்களில் கூடுதலான திறமைகளைக் காண்பிக்கும் மாணவர் ஒருவரை இதற்காக உள்ளடக்க வேண்டும்.

குழுவின் உள்ளீடு மற்றும் பெயர்ப் பட்டியல் ஆவணம் கல்லூரி அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

ஆ) குழுவின் செயற்பாடுகள்

கீழ்க்குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் குழுவின் பகுப்பாய்வுக்கு உட்படுத்த வேண்டியதுடன் சமகால அடிப்படையில் காணப்படும் முன்னேற்றங்கள் தொடர்பிலும் கருத்திற்கொண்டு விரிவான தீர்வுகளை வழங்கும் வேலைத்திட்டங்கள் பாடசாலைகளில் அமுல்படுத்தப்படுதல் வேண்டும்.

- பாடசாலைகளில் மாணவர்கள் / ஆசிரியர்களின் உடல் உள தேகாரோக்கிய மட்டத்தில் பேணுதல்.
- பாடசாலை மாணவர்களின் / ஆசிரியர்களின் இனங்காணப்பட்ட விசேட பழக்க வழக்கங்களுக்கு அமையத் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- மாணவர்களின் அடைவு மட்டம் மற்றும் பரீட்சைப் பெறுபேறுகளை உயரிய மட்டத்தில் பேணுவதற்காக உதவுதல்.
- மாணவர்களின் பாடசாலைச் சமூகமளிப்பினை ஊக்குவிப்பதற்கும், இடைவிலகலைக் கட்டுப்படுத்துதற்கும் நடவடிக்கை எடுத்தல்.
- ஆசிரியர்கள் விடுமுறை பெறுவதற்கான விசேட நிலைமைகளைக் கருத்திற்கொண்டு மற்றும் அதனைக் கட்டுப்படுத்துவதற்காக உதவுதல்.
- பாடசாலையில் கவனம் செலுத்த வேண்டிய குழுவாக இனங்காணக் கூடிய மாணவர்களுக்காக விசேட வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல்.
- பாடசாலைச் சூழல் மற்றும் அதன் பாதிப்புக்களை இனங்காணுதல் மற்றும் அதற்குத் தீர்வுகளை வழங்குதல்.
- பாடசாலை ஒழுக்க நெறிகளை சிறந்த முறையில் பேணுவதற்கு உதவுதல்.
- பாடசாலைப் போதைப்பொருள் தடுப்புப் பணிகளை உயர் மட்டத்தில் பேணுதல்.

- பாடசாலையில் இடம்பெறக்கூடிய சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோகங்களை ஒழிக்க நடவடிக்கை எடுத்தல்.
- மாணவர்களின் அபிவிருத்தியினை நோக்காகக் கொண்டு பெற்றோரை அறிவுறுத்தல்.
- மாணவர்கள் பாடங்களைத் தேர்ந்தெடுக்கும் செயற்பாடுகளின் போது உதவுதல்.
- ஏனைய சமகால அடிப்படையில் எழக்கூடிய சீரற்ற நிலைமைகளின் போது அதற்குரிய செயற்பாடுகளைத் திட்டமிட்டு அமுல்படுத்தல். உதாரணமாக, திடீர் அனர்த்தங்கள், பாதகமான பிரச்சாரங்கள்.
- எதிர்கால தொழில் உலகுக்கு மாணவர்களை ஈடுபடுத்துவதற்கு பாடசாலைகளில் மேற்கொள்ள வேண்டிய அடிப்படைப் பணிகளை மேற்கொள்ளல்.

குழுவின் செயற்பாடுகள் :

இக்குழு சகல மாதங்களிலும் முதல் வாரத்தில் உரிய தினங்களுக்குள் கூட வேண்டும். உரிய விடயங்கள் தொடர்பான தீர்மானங்களை எட்ட பாடசாலை ஆலோசனை வேலைத்திட்டத்தின் மூலம் அவற்றுக்குத் தீர்வுகள் வழங்கப்படல் வேண்டும்.

இதற்காகத் தமது பாடசாலைக்குரிய வலயம் / கோட்டத்தில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை ஆசிரிய ஆலோசகர்களின் உதவியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

குழுவின் செயற்பாடுகளுக்குரிய பாடசாலை ஆலோசனை மற்றும் வழிகாட்டல் ஆசிரியர்களினால் அறிக்கை கொண்ட கோவையினைப் பராமரித்தல் வேண்டும்.

இ) பாடசாலை ஆலோசனை மற்றும் வழிகாட்டல் வேலைத்திட்டங்களுக்கு உதவிகளைப் பெற்றுக்கொள்ளல்.

பாடசாலை ஆலோசனைக்கு உரியதாக மேற்கொள்ளப்படும் விசேட பயிற்சிகள் மற்றும் வேலைத்திட்டங்கள் தொடர்பாக கல்வி அமைச்சு / மாகாண அல்லது வலயக் கல்வி அலுவலகங்கள் மூலம் அறிவுறுத்தப்படுதல் வேண்டும்.

இதற்கு மேலதிகமாக பல்வேறுபட்ட நிறுவனங்களின் உதவியினை பாடசாலைத் தேவைக்கு ஏற்றவாறு பயன்படுத்தப்பட வேண்டியதுடன் இதற்காக தமது வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரது முன் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

இச்சுற்றறிக்கையில் அடங்கும் விடயங்கள் பாடசாலையில் அமுல்படுத்தி மாணவர் சந்ததியனரின் மேம்பாட்டுக்காக ஒத்துழைப்பு வழங்குவது எம் அனைவரினதும் பொறுப்பாகும்.

இதற்காக தாங்கள் வழங்கும் ஒத்துழைப்பைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

எஸ்.எம். கோடாபய ஜயரட்ண
கல்விச் செயலாளர்,
கல்வி அமைச்சு.